(ஆ) வாலாசா ஊராட்சி ஒன்றியத் தலைவர்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் 82-வது விதியின்கீழ ஓர் அறிக்கையளிப்பார்கள்.

*** மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, "வாலாசா ஊராட்சி ஒன்றியத் தலைவர் கையாடல் செய்துள்ளார். அவர் மீது போலீஸ் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. போலீஸ் நடவடிக்கை எடுக்கும் முன்னாலே சர்க்கார் ஸ்டே கொடுக்கக்கூடிய நிலைமையைச் சொல்கிறேன்." இந்தக் கருத்துக்களை எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இந்த மன்றத்தில் கூறியுள்ளார்கள். இந்தக் குற்றச் சாட்டுக்கு ஆதாரம் இருக்கின்றதா எனத் தலைவர் அவர்கள் கேட்டார்கள். ஆதாரம் தந்தால் நடவடிக்கை எடுக்கிறேன் என்று மாண்புமிகு முதல்வரவர்கள் இந்த மன்றத்தில் உறுதி கூறினார்கள். மு. ப. 10-00

இது சம்பந்தப்பட்ட விவரங்கள் விசாரிக்கப்பட்டது. வட ஆற்காடு மாவட்டம் அம்மூர் ஊராட்சி மன்றத் தலைவர் கையாடல் வழக்கில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று முன்னாள் முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களுக்குத் தந்திவந்தது. அந்தத் தந்தியிலே உடனடியாக விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்மென்று அண்ணா அவர்கள் 9—12—1967-ம் தேதி உத்தரவிட்டுள்ளார்கள். அதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டது. அந்த ஊராட்சி மன்றத் தலைவர் 24—10—1968-ம் தேதி கைது செய்யப்பட்டார். வழக்குப் பதிவுசெய்து புலன் விசாரணை தொடங்கியது. இவர்மீது வழக்குத் தொடர்வதற்கு அரசாங்கத்தின் அனுமதியை 1958-ம் ஆண்டு பஞ்சாயத்துச் சட்டம் 169-ஆம் பிரிவுப்படி பெறுதல் வேண்டுமா வேண்டாமா என்ற சட்டப் பிரச்சினை எழுப்பப்பட்டது. இந்த வழக்குப் போன்ற பிற வழக்கு ஒன்றில் அரசாங்கம் மேற்படி 169-ஆம் பிரிவுப்படி நடவடிக்கை எடுத்ததை எதிர்த்து உயர்நீதி மன்றத்தில் அரசாங்கத்தின்மீது வழக்குப் போடப்பட்டிருந்தது. அந்த வழக்கில் அரசாங்கத்தின் அனுமதியில்லாமல் கிரிமினல் வழக்குப் போட லாம் என்று 22—7—1969-ம் தேதி தீர்ப்பளிக்கப்பட்டது. உயர்நீதி மன்றத்தில் இந்தச் சட்டப் பிரச்சனை பரிசீலனையில் இருந்ததால் அரசாங்கம் அனுமதி கொடுக்க இயலவில்லை. இந்தத் தீர்ப்புக் கிடைத்ததற்குப் பின்னர் மேற்படி வாலாசா பஞ்சாயத்து யூனியன் தலைவர்மீது கிரிமினல் வழக்கை நடத்தும் படி உத்திரவிட அரசாங்கம் அண்மையில் முடிவெடுத்துள்ளது. போலீஸ் நடவடிக்கை எடுக்கவில்லையென்றும், அரசாங்கம் தடையுத்திரவு பிறப்பித் துள்ளதென்றும் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூறியது முற்றிலும் தவறான தகவல்களாகும். ஆதாரமில்லாமல் உண்மைக்குப் புறம்பான குற்றச் சாட்டு களை அரசாங்கத்தின்மீது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்த மன்றத்தில் கூறியது வருந்தத்தக்கதாகும்.

(3) அறிக்கை அளித்தல்.

எழுதுபொருள் அச்சுத்துறை பற்றிய மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திரு. எ.வி.பி. ஆசைத்தம்பி அவர்கள் மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையை அளிப்பார்கள்.

திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி : தலைவர் அவர்களே, எழுதுபொருள், அச்சுத் துறை பற்றிய மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையை பேரவைமுன் வைக்கி றேன்.